[1973 ஆகஸ்ட் 4]

என்பதைத் தெரிவிக்க வேண்டும். 36 அடி படகு விலை அதிகமாக இருக்கிறது என்பதனால் சிலர்தான் வாங்கியிருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் 32 அடி படகைத்தான் வைத்திருக்கிறார்கள். 36 அடி படகை வைத்திருப்பவர்கள் நஷ்டம் அடைகிறார்கள் என்று கூறுவதற்கில்லை. அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நிகழ்ச்சி இருந்தால் அதை எடுத்துச் சொன்னால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

கும்மிடிப்பூண்டித் துணைவட்டத்தில் மீன்பிடித் துறைகள்

*15. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டித் துணை வட்டத்தில் உள்ள சுண்ணாம்புக்குளம், ஆரம்பாக்கம் பகுதி மீனவர்கள் தம் படகுகளை தாம் வசிக்கும் பகுதிகளுக்கே எளிதில் கொண்டு வர "சிறு துறைகள்" அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 650 லட்சம் ரூபாய் செலவில் சென்னையில் ஒரு பெரிய மீன்பிடி துறைமுகம் அண்மையில் கட்டப்படவிருப்பதால், சுண்ணாம்புக் குளம், ஆரம்பாக்கம் பகுதிகளைக்கொண்ட பழவேற்காட்டில் பெரிய துறைகளைக் கட்டுவதற்கு இந்திய அரசு விரும்பவில்லை.

இருப்பினும், தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள துறைமுக ஆய்வுக்குழு கடலோரப் பகுதிகளை ஆய்வு செய்யும் போது, பழவேற்காடு போன்ற இடங்களும் ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவு தெரிந்த பின்னர், மேல் நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கா. வேழவேந்தன் : மேற்சொன்ன திட்டங்கள் பாவலாக மீனவர்களுக்குப் பயன்படும் என்றாலும் சுண்ணாம்புக் குளம், ஆரம்பாக்கம் கிராமப்புறத்திலுள்ள மக்கள் கட்டுமரங்களைத் தாம் வாழும் பகுதிகளுக்கு எடுத்துப்போக சிறு துறைகள்

வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசாங்கம் இதைக் கவனித்து அங்கங்கே சிறு துறைகள் ஏற்படவும் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பழவேற்காடு பகுதியில் துறைமுக ஆய்வுக்குழு பரிசீலனை செய்திருக்கிறார்கள். அவர்களது ஆய்வு முடிந்த பிறகு என்ன என்ன வசதிகளைச் செய்துகொடுக்க முடியும் என்பதுபற்றி முடிவு செய்யலாம். சுண்ணாம்புக்குளம், ஆரம்பாக்கம் பகுதியில் நிறைய மணல் திட்டுகள் இருக்கின்றன. படகுகள் செல்ல முடியவில்லை, மணல் வாரி இயந்திரம் வைத்து மணல் திட்டை அகற்றுவதை விட மனித உழைப்பால் ஆட்களையே வைத்து மணலை அகற்றலாம், இதற்காகக் கிராம மக்களுக்கு நிதி உதவி அளிக்கலாம் என்ற செயற்குறிப்பு மீனளத் துறையின் பரிசிலனையிலிருக்கிறது.

நாட்டுப் படகுகளுக்கு இயந்திரங்கள் பொருத்துதல்

*16. வின—**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய-பெல்ஜிய திட்டத்தின் கீழ், செயல்படுத்தப்பட்டு வரும் நாட்டுப் படகுகளுக்கு இயந்திரத்தைப் பொருத்தும் திட்டத்தை மற்ற மாவட்டங் களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படி எத்தனை போட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அரசு தெரிவிக்குமா? 36 அடி போட்டுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த போட்டுகளில் கட்டிடம் சரியில்லை. கிரேக்ஸ் வந்திருக்கிறது. ஏர் கூலர் என்ற மெஷின்களை வைத்திருக்கிறார்கள். ஏரே போவ தில்லை. ஏர் போனால்தானே. கூல் ஆக்க முடியும்? இதுமாதிரி பல டிபெக்ட்டுகள் இருப்பதால் 36 அடி போட்டுகள் வாங்கியவர்கள் அப்படியே வைத்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது,